(ஆ) பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் கைது செய்யப்பட்டிருப்பதான செய்தி குறித்து

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received a telegraphic message on 1st March 1973 from the District Superintendent of Police, Salem Town that Thiru C. V. Velappan, M.L.A., Kabilamalai Constituency, Salem district was arrested for picketing before the Collector's Office on 1st March 1973 at 11-15 a.m. at Salem Town, under Sections 143, 341, I.P.C. and 7 (1) of the Criminal Law Amendment Act.

(3) அவை உரிமைத் தீர்மானம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே பேரவைத் துணைத் தலைவரைப்பற்றியும், உறுப்பினர்களைப்பற்றியும் அவைக்கு வெளியே பேசிய பேச்சும் அது 'தென்னகம்' நாளிதழில் வெளியிடப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், திரு. கோதர் முகைதீன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

"'தென்னகம்' தமிழ் நாளிதழ் சென்னை 28—2—1973 வெளியூர் 1—3—1973 பதிப்பில் கீழ்க்கண்ட தகவல் இம்மாமன்றத்தின் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதாக வெளிவந்துள்ளது—

'கோவிலில் பூசாரியாகப் போக வேண்டியவர்கள் தவறி சட்டமன்றத்திற்கு மணி அடிக்க வந்து விட்டார்கள்'.

சட்டசபையில் வன்முறை.

'நேர்மையான பதிலை அளிக்க தைரியமில்லாத மானங்கெட்டவர்கள் வெளியே அனுப்புகிறார்கள். மானம் மரியாதை இருக்கக் கூடியவர்கள் சட்டமன்றத்தில் பேச முடியாது.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறது என்பதால் பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள். வன்முறையில் ஈடுபடுகிறார்கள்'.